# ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி அநுரவுடன் முக்கிய பேச்சு



ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரோ பிரெஞ், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை இன்று முற்பகல் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ஜே.வி.பியின் தலைமையகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இலங்கை அலுவலகத்தின் அபிவிருத்தி ஆலோசகர் மற்றும் வதிவிட ஒருங்கிணைப்பாளர் எட்வெட்டும், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர் பிமல் ரத்நாயக்கவும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின்போது இலங்கையின் நிகழ்கால பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

அரசின் பொருளாதார இலக்குகள் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் மக்கள் மேலும் துன்பத்துக்கு ஆளாகியுள்ளனர் என்று சுட்டிக்காட்டிய அநுரகுமார திஸாநாயக்க எம்.பி., அரசு தேர்தலை நடத்தாது மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்துள்ளமை தொடர்பிலும் ஐ.நா. பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

தேர்தலை நடத்துவதற்குக் கட்டளையைப் பிறப்பித்த நீதிபதிகள் நாடாளுமன்றச் சிறப்புரிமைக் குழுவுக்கு அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டுள்ளனர் எனவும், மக்களின் ஆர்ப்பாட்டத்தை அடக்குமுறைக்குட்படுத்தி ஜனநாயக விரோதப் போக்கை அரசு முன்னெடுக்கின்றது எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. (03)


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 10 திங்கட்கிழமை 29.08.2023 கதிர் 60



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


## சு.கவின் மாநாட்டில் சந்திரிகா பங்கேற்பு

### மைத்திரி நம்பிக்கை

எதிர்வரும் செப்டெம்பர் 3ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாநாட்டில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் பங்கேற்பார் எனத் தான் நம்புவதாக முன்னாள் ஜனாதிபதியும் கட்சித் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கட்சியால் வழங்கப்பட்ட அழைப்பிதழை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஏற்றுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கட்சி மாநாட்டால ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எவ்வித குழப்பமும் இல்லை. பொருளாதாரப் பிரச்சினையைக் கருத்தில்கொண்டே மாநாட்டை குருநாகலில் நடத்தாமல் கொழும்பில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இது தன்னிச்சையாக எடுக்கப்பட்ட முடிவு அல்ல. கொழும்பில் நடைபெறவுள்ள

2➤





## முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை மக்களின் காணிகளை விடுவிக்க களவிஜயம்

முல்லைத்தீவு மாவட்டம் தண்ணிமுறிப்பு பகுதிக்குட்பட்ட குருந்தூர் மலையினை அண்மித்த பகுதியில் தமிழ் மக்களின் பூர்வீகக் குடியிருப்பு, விவசாயக் காணிகளை விடுவித்தல் தொடர்பாக அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் நேரடிக் கள விஜயத்தினை நேற்றைய தினம் மேற்கொண்டிருந்தனர்.

கடந்த மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, இந்த கள விஜயம் இடம்பெற்றது.

இந்தப் பகுதியில் வாழ்ந்த மக்கள் 1984 ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்து

2➤

## சீன ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வர அனுமதி வழங்கப்படவில்லையாம்

### வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு



ஷி யான் சிக்ஸ் என்ற சீன ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கோரிக்கையை மேலும் ஆராய்ந்து வருவதாகவம் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

குறித்த கப்பல் இலங்கைக்கு வரும் திகதிகள் தொடர்பாக எவ்வித அறிவிப்பும் வெளியிடப்படவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஆயினும், வெளிவிவகார அமைச்சு மற்றும் நாரா நிறுவனம் விடுத்த கோரிக்கைகளுக்கு அமைய குறித்த கப்பலுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு முன்னதாகக் கூறியிருந்தது. (04)

## பரபரப்பாகின்றது தெற்கு அரசியல் களம் ஆளுங்கட்சியினர் வெளிநாடு பறக்க தடை

செப்டெம்பர் முதல் வார நாடாளுமன்றக் கூட்டத் தொடரின்போது ஆளுங்கட்சியினர் வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வெளிநாடுகளில் தங்கியிருக்கும் ஆளுங்கட்சி உறுப்பினர்களை செப்டெம்பர் 5 ஆம் திகதிக்குள் நாடு திரும்புமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆளுங்கட்சி பிரதமர் கொறடா அலுவலகம் ஊடாக இதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான ஐக்கிய மக்கள் சக்தியின் நம்பிக்கையில்லாப்

2➤

## யாழ். பல்கலை மாணவன் கத்தியுடன் நேற்று கைது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்கும் சிங்கள மாணவர் ஒருவர் கத்தியுடன் நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

வர்த்தக நிலையம் ஒன்றுக்குக் கத்தியுடன் சென்று வர்த்தக நிலையத்தில் வேலை செய்பவர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமை தொடர்பாக, அந்த வர்த்தக நிலைய உரிமையாளரால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மாணவனைக் கைதுசெய்துள்ளனர். கைது செய்யப்பட்ட மாணவனைக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து, விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (03)

## நாளையும் அரச வங்கிகள் இயங்கும்

நாளைய தினம் போயா தினமாக இருந்தாலும் அரச வங்கிகள் திறந்திருக்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் அனைத்துக் கிளைகளும் அஸ்வெசும நலன்புரி பயனாளிகள் தமது கொடுப்பனவுகளைப் பெறுவதற்காக திறந்து வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (04)


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# இலங்கை - ஜப்பான் தொழிநுட்ப ஒப்பந்தத்துக்கு அனுமதியளிப்பு

இலங்கை மின்சார சபைக்கும் ஜப்பான் மின்சார தக வல் நிலையத்திற்கும் இடையில் தொழிநுட்ப ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை மின்சார சபை 2018 ஆம் ஆண்டு முதல் ஜப்பான் மின்சார தகவல் மையத்துடன் தொடர்பைப் பேணி வருகிறது. 2019 இல் தொழிநுட்ப ஒத்துழைப்புத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு முதல் தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான புரிந்-துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

சட்டமா அதிபர் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அவதானிப்புகளுக்கு அமைய, அதற்கான உத்தேச தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்த வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. (க)



## வல்லைச் சந்தியில் தீப்பிடித்தது பட்டா!

### பயணித்துக்கொண்டிருந்த வாகனத்தில் தீடீரென பற்றிய தீ - யாழில் பரபரப்பு!

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியின் வல்லைச் சந்திப் பகுதியில், பயணித்துக்கொண்டிருந்த பட்டா வாகனம் ஒன்று தீப்பிடித்து எரிந்து நாசமாகியுள்ளது.

மின் கசிவினால் வாகனம் தீப்பற்றியிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த பொருட்கள் ஏற்றும் பட்டா வாகனமே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளது. (க)

# மூத்த ஒலி, ஒளிபரப்பாளர் பி.விக்னேஸ்வரனின் ‘நினைவு நல்லது’ நூலின் அறிமுக விழா யாழில்





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் அனுசரணையில், மூத்த ஒலி, ஒளிபரப்பாளர் பி.விக்னேஸ்வரனின் ‘நினைவு நல்லது’ நூலின் அறிமுக விழாவானது இன்றைய தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறறது.

ஊடகத்துறையில் தனது ஐம்பதாண்டுகளுக்கும் மேலான அனுபவப் பகிர்வினை உள்ளடக்கி பி. விக்னேஸ்வரன் இந்நூலினை உருவாக்கியுள்ளார்.

இலங்கையில் அவர் ஆற்றிய கலைப் பணிகள், வானொலியில் தயாரிப்பாளராக, செய்தி வாசிப்பாளராக, தொலைக்காட்சித் துறையில் தயாரிப்பாளராக, பணிப்பாளராக பல்வகைமைச் சூழலில் அவருக்கிருந்த வாய்ப்புக்கள், எதிர்கொள்ளப்பட்ட சவால்கள், புலம்பெயர் நாட்டில் ஊடகப் பணிகள் எனப் பலதரப்பட்ட விடயதானங்களை ஒன்றிணைத்து ஊடகத்துறைசார் ஆவணமாக, ஆயிரம் பக்கங்களுக்கு அண்மித்ததாக இந்த நூலினை பி.விக்னேஸ்வரன் தந்துள்ளார்.

ரொரன்ரோ ‘தாய்வீடு’ மாத இதழில் ஆறு ஆண்டுகளாக வெளிவந்த தொடரின் நூல் வடிவமாக இப்படைப்பாக்கம் விளங்குகின்றது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் ஊடகத்துறை சார்ந்தோர், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (01)

## பரபரப்பாகின்றது தெற்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணை செப்டெம்பர் 5 முதல் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. செப்டெம்பர் 7 அல்லது 8 ஆம் திகதிகளில் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

எனவே, அந்தப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கும், ஆளுங்கட்சியின் ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்கும் ஆளுங்கட்சியினர் கட்டாயம் சபையில் இருக்க வேண்டும் என்று பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (03)

## முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமுழமுனை, முறிப்பு, பூதன்வயல், தண்ணீரூற்று, முள்ளிக்குளம் முதலிய பகுதிகளில் வசித்து வருகின்றனர். இன்றுவரை அவர்கள் மீள்குடியமரவில்லை.

தற்போது இந்தப் பகுதியில் சில இடங்களை வனவளத் திணைக்களமும் தொல்லியல் திணைக்களமும் தங்களுடைய பகுதிகளாக எல்லையிட்டுள்ளனர். அதேநேரம், சில வயல் நிலங்களை விதைப்பதற்கும் தடை விதித்தனர்.

இந்த நிலையில், நேரடிக் கள விஜயத்தினை மேற்கொண்டு மக்களின் காணிகளை விடுவித்தல் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு கடந்த மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

நேற்றைய கள விஜயத்தின்போது சில இடங்களை விடுவித்தல் தொடர்பாகப் பரிசீலிக்கப்படும் எனவும், பெரும்பாலான பகுதிகள் உரிய அமைச்சின் மேலதிகாரிகளுடன் பேசி விடுவித்தல் தொடர்பாகத் தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மக்களின் விளைநிலங்கள் ஊடாக தொல்லியல் திணைக்களத்தினர் எல்லைக் கற்களைப் போட்டுள்ளனர். இங்கு பல பகுதிகளில் தொல்லியல் எச்சங்கள் காணப்படுவதாகவும் இவற்றை விடுவிக்க முடியாது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் அமைந்துள்ள குருந்துக்குளம், மீள் குடியேற்றத்தின் பின்னர் விவசாய நடவடிக்கைக்காகப் புனரமைப்புச் செய்யப்பட்டது. இந்தப் பகுதியும் தொல்லியல் திணைக்களத்திற்கு உரியதாக எல்லைப்படுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், குளத்தில் இருந்து நீரை வெளியேற்றும் பகுதியான துருசு இன்றுவரை திறக்கப்படவில்லை. நீரைவெளியேற்றும் பகுதியில் கால்வாய் வேலை செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. காரணம் அந்தப் பகுதியிலும் தொல்லியல் எச்சம் காணப்படுவதாக தொல்லியல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜெயத்திலக தெரிவித்துள்ளார்.

இந்தக் கள விஜயத்தில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் (நிர்வாகம்), மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் (காணி), கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி. உமாமகள், மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், மாவட்ட நில அளவையாளர், மாவட்ட வன அதிகாரி, காணிப்பகுதி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்குகொண்டிருந்தனர். (02)

# முட்டை இறக்குமதிக்கு அனுமதி!

கொழும்பு, ஓக.29

அடுத்த 3 மாதங்களில் இந்தியாவில் இருந்து 92.1 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானம் தொடர்பாக நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அதன்படி, விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறையால் பரிந்துரைக்கப்பட்ட 3 இந்திய நிறுவனங்களிடமிருந்து இலங்கை அரசாங்கம் விலைக்கோரல்களை வழங்குமாறு கேட்டுள்ளது. (த)

## சு.கவின் மாநாட்டில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கவுள்ளனர், என்றும் அவர் தெரிவித்துள்ளார். (03)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

## யாழ் முயற்சியாளர் - 2023 விற்பனைக் கண்காட்சி





யாழ் மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவால் நடத்தப்படும் "யாழ் முயற்சி யாளர் - 2023" விற்பனைக் கண்காட்சி இன்றைய தினம் ஆரம்பமானது.

சிறு தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற் கும் அவற்றிற்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் முகமாகவும் இந்தக் கண்காட்சி இன்றும் நாளையும் யாழ்ப்பாணம், நல்லூர், முத்திரைச்சந்தி அருகாமையில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்கா வளாகத்தில் நடைபெறுகிறது.

யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பிரதம விருந்தின ராகக் கலந்துகொண்டிருந்தார்.

மேலதிக அரசாங்க அதிபர் (காணி), நல்லூர் பிரதேச செயலாளர் எழிலரசி அன்ரன் யோகநாயகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் கமலகுமாரி கருணாநிதி, தொழில்துறைத் திணைக்களத்தின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் மற்றும் மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நூறு வரையான முயற்சியாளர்கள் பங்கேற் றுள்ள இந்தக் கண்காட்சியினைப் பார்வையிட்டு, உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதோடு தரமான உற்பத்திப் பொருட்களை

கொள்வனவு செய்து பயன் பெறுமாறும் யாழ் மாவட்டச் செயலக சிறு தொழில் முயற்சி அபிவிரு-த்திப் பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

ஒவ்வொரு வார இறுதியிலும் மாவட்டச் செயல கத்தினால் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்கு விக்கும் முகமாக காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இவ்வாறான கண்காட்சி இடம்பெற வுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (01, க)



## ஆதிகதிர்காமம் கபில்வத்தை யாத்திரை இன்று ஆரம்பம்

(வி.ரி. சகாதேவராஜா)

இலங்கையில் சித்தர்களின் தாய் வீடு என்று போற்றப் படும் ஆதி கதிர்காமம் கபில்வத்தைக்கான காட்டுவழி யாத்திரை இன்று காலை மொனராகலையிலிருந்து ஆரம்பமாகியது.

பிரபல இந்திய பணவளக்கலை நிபுணர் குபேர குருஜீ ஆனந்த் சகிதம் சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் யாத்திரை நடைபெறுகிறது.

சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை இரு தினங் களும் கபில்வத்தையில் தங்கியிருந்து யாத்திரிகர்கள் வழிபாடியற்றுவார்கள்.

## ஊடகவியலாளர் நூருல் ஹுதா உமர் ஸ்ரீலங்கன் டொப் 100 விருது பெற்றார்



கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக் குழு உறுப்பினரும், ஊடகவியலாளருமான நூருல் ஹுதா உமர், பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அகாசா நிறுவனத்தினால் ஸ்ரீலங்கன் டொப் 100 விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

15 வருடங்களாக ஊடகத்துறை யில் பணியாற்றிவரும் இவர் ஆய் வுக் கட்டுரைகளை வரைவதி லும், சமூகப் பிரச்சினைகளை துணிச் சலுடன் ஊடகங்களுக்கு அறிக் கையிடுவதிலும் முன்னிலை வகிக் கும் ஒருவராவார். அரசியல், சமூக, சமய, பொருளாதார பிரச்சினை-களை வெளிக்கொண்டுவரும் இவர் ஊடகத்துறைக்காக இந்த ஸ்ரீலங்கன் டொப் 100 விருதைத் தனதாக்கியுள்ளார்.

இந்த நிகழ்வில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ, நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, இலக்கியபட புரவலர் காஸிம் உமர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பணிப்பாளர் ஹட்சன் சமரசிங்க, மதகுருமார்கள், ஊடக நிறுவனப் பிரதானிகள், பத்திரிகை ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (04)

யாழ்முற்றம்
Face of Jaffna
கறுவா, சந்தனம், கராம்பு, கோப்பி, கொக்கோ, மிளகு ஆகிய மரக்கன்றுகள் விற்பனைக்கு உள்ளன.
076 443 8620
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



# பாலித் தீவில் கடும் நில நடுக்கம் சேத விபரங்கள் வெளிவரவில்லை



இந்தோனேசியாவின் பாலித் தீவிலும், அந்த நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று அதிகாலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அடுத்தடுத்து இரண்டு முறை நில அதிர்வும் உணரப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த நிலநடுக்கத்தால் உயிர் இழப்போ, சேதமோ ஏற்பட்டதாக இதுவரை எந்தத் தகவலும் வெளிவரவில்லை.

அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 7.1 ஆகப் பதிவாகியிருந்ததாகவும், இந்த நிலநடுக்கத்தின் மையப்பகுதி கிலி ஏர் பகுதியிலிருந்து 181 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பாலி கடலின் மையத்தில் அமைந்திருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, அடுத்தடுத்து உணரப்பட்ட இரண்டு நில அதிர்வுகள் முறையே 5.4 ஆகவும், 5.6 ஆகவும் ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளன.

நிலநடுக்கத்தை உணர்ந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியிருந்தனர். அப்போது கடற்கரைப் பகுதிகளில் பலத்த அலை வீசியதாலும் மக்கள் அச்சம் அடைந்தனர். ஆனால், இந்த நிலநடுக்கம் காரணமாக சுனாமி ஏற்படும் அபாயமில்லை என்று புவியியல் ஆய்வு மையம் அறிவித்ததைத் தொடர்ந்து மக்களது பதற்றம் குறைவடைந்துள்ளது. (04)

# நைஜரிலிருந்து வெளியேற பிரான்ஸ் தூதர் மறுப்பு!



நைஜரிலிருந்து வெளியேற வேண்டும் என்று அந்த நாட்டு ராணுவ ஆட்சியாளர்கள் பிறப்பித்திருந்த உத்தரவை பிரான்ஸ் தூதர் இட்டே சில்வெயின் நிராகரித்துள்ளார்.

இது குறித்து தங்கள் நாட்டு தூதர்களிடையே திங்கட்கிழமை உரையாற்றிய பிரான்ஸ் அதிபர் இமானுவல் மக்ரோன், கடந்த சில மாதங்களாக சூடானிலும், தற்போது நைஜரிலும் பிரான்ஸ் தூதர்கள் பல்வேறு சவால்களை துணிச்சலுடன் எதிர்கொண்டு வருகின்றனர்.

நைஜர் ராணுவ ஆட்சியாளர்கள் விதித்திருந்த கெடுவுக்குப் பிறகும் அந்த நாட்டிலிருந்து பிரான்ஸ் தூதர் இட்டே சில்வெயின் வெளியேறாமல் இருப்பது மிகவும் பாராட்டத்தக்கது என்றார்.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜர், பிரான்ஸ் கொலனி ஆதிக்கத்திலிருந்து கடந்த 1960 ஆம் ஆண்டு விடுதலை பெற்றதிலிருந்து அங்கு ராணுவ ஆட்சியும், ஜனநாயக முறையில் தேர்வு செய்யப்பட்ட தலைவர்களின் ஆட்சியும் மாறி மாறி நடைபெற்று வந்தன.

இந்த நிலையில், கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் முகமது பஸூம் வெற்றி பெற்று நாட்டின் பத்தாவது அதிபராக 2021 இல் பதவியேற்றார். நைஜரில் அமைதியான முறையில் நடைபெற்ற முதல் ஆட்சி மாற்றம் அது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், முகமது பஸூமின் ஆட்சியை ராணுவத்தின் ஒரு பிரிவினர் கடந்த மாதம் 26ஆம் திகதி கவிழ்த்தனர். இதற்கு பிரான்ஸ் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளும், ஆபிரிக்க யூனியனும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

நைஜரில் ஜனநாயக அரசை மீண்டும் அமைக்காவிட்டால் கிளர்ச்சிப் படையினருக்கு எதிராக ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக மேற்கு ஆபிரிக்க நாடுகளின் கூட்டமைப்பான எகோவாஸ் எச்சரிக்கை விடுத்து வருகிறது.


இந்தச் சூழலில், 48 மணி நேரத்துக்குள் பிரான்ஸ் தூதர் இட்டே சில்வெயின் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று கிளர்ச்சிப் படையினர் கடந்த வெள்ளிக்கிழமை கெடு விதித்தனர். அந்தக் கெடு முடிந்த பிறகும், நைஜரிலிருந்து வெளியேற சில்வெயின் மறுப்பு தெரிவித்துவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (04)

# நிலவை இந்து நாடாக அறிவிக்க வேண்டும்! இந்திய மத அமைப்பின் தலைவர் கருத்து

இந்தியாவின் சந்திரயான் - 3 விண்கலம் கடந்த 23 ஆம் தேதி நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கியது. சந்திரயான் - 2 விண்கலம் நிலவில் மோதிய பகுதிக்கு திரங்கா என பெயர் வைத்திருந்த இந்தியப் பிரதமர் மோடி, சந்திரயான் - 3 விண்கலம் நிலவின் மேற்பரப்பில் தரையிறங்கிய பகுதிக்கு சிவசக்தி என பெயர் வைத்துள்ளார்.

இந்த நிலையில், நிலவை இந்து நாடாக அறிவிக்க வேண்டுமென மத அமைப்பான அனைத்திந்திய இந்து மகாசபா தேசிய தலைவர் சக்ரபனி மகாராஜ் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக அவர் டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், நிலவை இந்து நாடாக அறிவிக்க வேண்டும் என நான் விரும்புகிறேன். இதற்காக நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். சந்திரயான் - 3 விண்கலம் தரையிறங்கிய பகுதிக்கு சிவசக்தி என பெயர் வைத்த பிரதமர் மோடிக்கு நன்றி.



நிலவில் இந்து நாடு அமைக்கப்பட்ட பின்னர் அதன் தலைநகராக சிவசக்தி பகுதி இருக்க வேண்டும். அப்போதுதான் பயங்கரவாத மனநிலையுடன் யாரும் அப்பகுதியை அடையமாட்டார்கள் என குறிப்பிட்டிருக்கிறார். (04)

# அருணாசலப் பிரதேசத்தை உள்ளடக்கி சீனாவின் நில வரைபடம் வெளியானது




இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியான அருணாசலப் பிரதேசம், தங்கள் நாட்டுக்குச் சொந்தமானது என சீனா தொடர்ந்து அறிவித்துச் செயற்பட்டு வருகிறது.

அருணாசலப் பிரதேசத்தை தெற்கு திபெத் எனக் கூறும் சீனா, தொடர்ந்து எல்லையில் மோதல் போக்கைக் காண்பிப்பதை வாடிக்கையாகக் கொண்டுள்ளது என்று இந்தியா குற்றஞ்சாட்டுகிறது.

சீனாவின் இந்தச் செயற்பாட்டுக்கு இந்திய மத்திய அரசாங்கத் தரப்பில் பலமுறை கண்டனம் தெரிவிக்கப்பட்டும் விட்டது. ஆனாலும் சீனா தொடர்ந்து அத்துமீறி வருகிறது என்று இந்தியா கூறுகிறது.

இந்த நிலையில், தற்போது சீனா தனது புதிய நில வரைபடம் ஒன்றை அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது. அதில் தனது ஆக்கிரமிப்பின் கீழாக வைத்து இருக்கும் இந்தியப் பகுதிகளை அக்சயா சின் என குறிப்பிட்டிருக்கிறது. அத்துடன் அருணாச்சல பிரதேச மாநிலத்தை, தெற்கு திபெத் எனவும் பெயரைக் குறிப்பிட்டுள்ளது.

இந்திய நிலப் பகுதிகளை மட்டுமல்ல பல்வேறு நாடுகளின் எல்லைப் பகுதிகளையும்கூட சீனா தமது பிரதேசம் என இந்த வரைபடத்தில் உரிமை கோரி இருக்கிறது என்று இந்தியா சுட்டிக்காட்டியுள்ளது.

தாய்வானையும் தனது நிலப் பகுதியாக சீனா குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லடாக் எல்லையில் கால்வன் பள்ளத்தாக்கு மோதலைத் தொடர்ந்து இந்தியா - சீனா நாடுகளுக்கு இடையே பல்வேறு கட்டப் பேச்சுவார்த்தைகள் கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன. இருதரப்புக்கும் இடையேயான பதற்றத்தைத் தணிக்கும் வகையில் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

இந்த நிலையில், மீண்டும் சீனா, இந்தியாவின் ஆத்திரத்தைத் தூண்டும் வகையில் வரைபடத்தை வெளியிட்டு இருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# கேரள முதல்வர் பினராயி விஜயன் ஓணம் பண்டிகைக்கு வாழ்த்தினார்

தென்தமிழகத்திலும் கேரள மாநிலத்திலும் கொண்டாடப்படும் ஒரு பாரம்பரிய சிறப்புமிக்க திருவிழாவான ஓணம் பண்டிகையை மக்கள் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

இந்த ஓணம் பண்டிகைக் கொண்டாட்டங்கள் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமான நிலையில், இன்று ஓணம் விருந்து படைத்து மக்கள் இந்தப் பண்டிகையை நிறைவு செய்கின்றனர்.

இப்பண்டிகையை முன்னிட்டு இந்திய அரசியல் கட்சித் தலைவர்கள் உட்பட பிரபலங்கள் பலரும் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

ஓணம்பண்டிகைக்கு கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் தனது வாழ்த்துக்களைப் பகிர்ந்துள்ளார். ஓணம் என்பது செழுமை, சகோதரத்துவம் மற்றும் சமத்துவத்தின் கொண்டாட்டமாகும். சாதி, மதப் பிரிவினைகளைக் கடந்து, மனித ஒற்றுமையை வலுப்படுத்த ஓணம் நம்மைத் தூண்ட வேண்டும்.

கொண்டாட்டங்கள் பிரிவினை எண்ணங்களால் மாசுபடாத மனங்களின் கூட்டமாக இருக்க வேண்டும். அனைவருக்கும் அன்புடன் ஓணம் திருநாள் நல்வாழ்த்துக்கள், என்று அவர் தனது வாழ்த்தில் தெரிவித்துள்ளார். (04)

# ஹிஜாப் சரியாக அணியாததாகத் தெரிவித்து மாணவிகளுக்கு முடியை மழித்த ஆசிரியர்

இந்தோனேசியாவில் ஹிஜாப் சரியாக அணியாத மாணவிகளுக்கு ஆசிரியர் மொட்டை அடித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தோனேசியாவின் பிரதான தீவுகளில் ஒன்றான கிழக்கு ஜாவாவில் உள்ள லாமங்கன் நகரில் உயர்நிலைப் பாடசாலையொன்றில் படிக்கும் இஸ்லாமிய மாணவிகள் 14 பேர் ஹிஜாப்பை சரியாக அணியாமல் சென்றதாகத் தெரிவித்து அவர்களது தலையில் உள்ள பாதி முடியை மழித்து ஆசிரியர் ஒருவர் அவமானப்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் இந்தோனேசியாவில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய நிலையில், மாணவிகளின் பெற்றோர்களிடம் பாடசாலை நிர்வாகம் மன்னிப்பு கேட்டதோடு, அந்தச் செயலில் ஈடுபட்ட ஆசிரியரைப் பணியிடை நீக்கமும் செய்துள்ளது.

இதேவேளை, முந்தைய காலங்களில்



இந்தப் பாடசாலையில் படித்த மாணவிகள் ஹிஜாப் அணிய மறுத்ததால், பாடசாலையில் இருந்து நீக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த விவகாரத்தில் இந்தோனேசியக் கல்வித்துறை உடனடியாகத் தலையிட்டு, சம்பந்தப்பட்ட ஆசிரியரைப் பணி நீக்கம் செய்ய வேண்டும் என்றும், மாணவிகளுக்கு உளவியல் ரீதியாக ஆலோசனை வழங்க வேண்டும் எனவும் மனித உரிமைகள் ஆர்வலர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (04)

# இலங்கை - தாய்லாந்து நாடுகளுக்கு இடையே சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்



இலங்கை மற்றும் தாய்லாந்துக்கு இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை அடுத்த வருடத்தில் ஏற்படுத்திக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தத்திற்காக இந்த வருடத்தில் மாத்திரம் இரண்டு நாடுகளுக்கும் இடையில் மேலும் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளதாகவும், இந்த மாதம் இடம்பெற்ற ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின்போது, சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதன்போது, முதலீடு, வர்த்தக மேம்பாடு, தொழிநுட்பத் தடைகள் மற்றும் சட்டச் சிக்கல்கள் தொடர்பான அனைத்து விடயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தத்திற்கான இணக்கப்பாடுகளை இந்த வருட இறுதிக்குள் எட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அடுத்த வருட முற்பகுதியில் அதில் கையெழுத்திடுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்காக, எதிர்வரும் ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க)

## கனகாம்பிகைக் குளம் மேச்சல் தரைக்கு தீ வைத்து எரித்து சேதமாக்கிய விசமிகள்

கனகாம்பிகைக் குளத்தின் முன் பகுதியிலிருந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பின் பகுதி வரை உள்ள ஆற்றுப்படுகையின் இரு பக்கங்களும் மேச்சல் தரைக்கு என ஒதுக்கப்பட்டுள்ளன.

தற்போது நிலவுகின்ற மிகவும் கடுமையான வெப்பமான காலநிலையில் பார்க்கும் இடமெல்லாம் வறண்டு போய்க் காணப்படுகின்ற நிலையில் அந்த ஆற்றுப் படுகையின் ஈரம் காரணமாக அதனைச் சூழவுள்ள பகுதிகளில் பச்சையான புற்கள் காணப்படுகிறன.

அந்தக் கிராமங்களில் கால்நடைகளை வளர்ப்பே-ார், அந்தப் பகுதிகளிலேயே தங்களுடைய கால்நடைகளை மேயவிட்டு, அவற்றின் உயிர்களை காப்பாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில், சிறிதும் மனசாட்சியின்றிய மனிதப் பிறவிகள் சிலர் குறித்த மேச்சல் தரைக்கு வேண்டும் என்றே தீ வைத்துள்ளனர் எனவும், இதனால் சுமார் ஆறு ஏக்கர் வரை எரிந்துள்ளதாகவும் கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவித்துள்ளனர்.

ஏதோ உள் நோக்கத்துடன் இந்தத் தீ வைப்பு இடம்பெற்றிருக்கலாம் எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். (02)



## சமுர்த்தி உத்தியோகத்தர்களின் நிர்வாகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு: பிரதமர் உறுதி

இலங்கை நாடாளுமன்றில் முன்வைக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னர் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் நிர்வாகப் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

சமுர்த்தி உத்தியோகத்தர்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பாக அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே பிரதமர் தினேஷ் குணவர்தன இந்த உத்தரவுகளை வழங்கியுள்ளார்.

சமுர்த்தித் திணைக்களத்திற்கு உள்வாங்கப்படும் போது 44 உ(11) பிரிவின் கீழ் தமது விருப்பத்தை வெளிப்படுத்திய உத்தியோகத்தர்கள், அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய 60 வீத ஊழியர் சேமலாப பங்களிப்பு நிதியைச் செலுத்துவதில் 4 வீத மேலதிக வட்டியை அறவிடத் தீர்மானித்துள்ளமை நியாயமற்றதாகும் என தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தில் பதவிகள் மற்றும் ஊழியர்கள் எண்ணிக்கைக்கான அங்கீகாரம், சமுர்த்தி உத்தியோகத்தர்களை எம். என் - 2 சம்பள அளவுத்திட்டத்தில் நிறுவுதல், பதவி உயர்வு



முறை மையை அமைத்தல், சமுர்த்தி அபிவிருத்திச் சேவைக் காலத்துடன் சமுர்த்தி ஊழியர் சேவைக் காலத்தைச் சேர்த்தல், விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதிக்கான நிலுவைத் தொகையில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கூட்டு வட்டியுடனான 4 வீத மிகைக் கட்டணம் போன்ற பல விடயங்கள் தொடர் பாக விசேட கவனம் செலுத்தப் பட்டது.

இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தடையாக உள்ள கட்டளைச் சட்டங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் அமைச்சரவைத் தீர்மானங்கள் தொடர்பான விடயங்களை அதிகாரிகள் விளக்கியதுடன், நாடு நெருக்கடியை எதிர்நோக்கும் இத்தருணத்தில் இந்தப் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கு அனைவரதும் அர்ப்பணிப்பு அவசியம் எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

மேலும், அரச ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாதிருப்பது, செயலாற்றுகைப் பின்னடைவதற்கு காரணம் என அவர் சுட்டிக்காட்டினார். (க)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குருசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.08.2023இல் வெளியிடப்பெற்றது.